உங்களின் கவனத்திற்கு:

- ❖ஆலயத்திலிருந்து அன்னையின் திருச்சுரூபம் வீட்டிற்கும், அனைத்து இல்லங்களுக்கும் எடுத்துச் செல்லும்போது, புனிதம் மரியாதை காக்கவும்.
- ❖இல்லங்களில் அன்னையின் திருச்சுரூபம் இருக்கும் நாட்களில், மாலையில் இக் கையேட்டின் உதவியுடன் திருச்செபமாலை சொல்லவும்.
- ❖அன்னையின் திருச்சுரூபம் எந்த இல்லத்தில் இருக்கிறதோ, அந்த இல்லத்திற்குச் அடுத்த குடும்பம் சென்று, அன்னையின் திருச்சுரூபத்தைப் பெறவும்.
- ❖இல்லத் தரிசிப்பின் பின்பு, அன்னையின் திருச்சுரூபம் ஆலயத்தை வந்தடையும்.

புனித. சிவீத்தூன் கத்தோலிக்க தமிழர் அன்பியம்

**St.Svithun Tamilsk Katolsk Forening**
**Stavanger**

# அருள் நிறைந்த மரியே வாழ்க!




## மரியன்னையின் இல்லத் தரிசிப்பு
## வைகாசி மாதம்

## மரியன்னையின் இல்லத்தரிசிப்பு வழிபாட்டு ஒழுங்குமுறை

❖வருகைப்பாடல் (மரியன்னைக்கு)

❖செபமாலைத் தியானம்.
(தேவமாதாவின் வணக்கமாத புத்தகம். பக்கம் 142-143).

முதலாம் காரணிக்கம்.
திருச்சபைக்காகவும், அதை வழிநடத்தும் பாப்பரசர், ஆயர்கள், குருக்கள், துறவிகளுக்காக ஒப்புக்கொடுத்தல்

இரண்டாம் காரணிக்கம்.
எமது குடும்பத்திற்காகவும் அதன் விசுவாச, ஒற்றுமை வாழ்வுக்காகவும் ஒப்புக்கொடுத்தல்.

மூன்றாம் காரணிக்கம்.
உலக சமாதானத்துக்காக, விசேடவிதமாக எமது நாட்டின் சமாதானத்துக்காக ஒப்புக்கொடுத்தல்.

❖பாடல் சிந்தனைக்கு.

நான்காம் காரணிக்கம்.
கிறிஸ்தவர்களின் மனமாற்றத்திற்காக ஒப்புக்கொடுத்தல்.

ஐந்தாம் காரணிக்கம்.
கிறிஸ்தவர்களின் ஒற்றுமைக்காக ஒப்புக்கொடுத்தல்.

❖பிரார்த்தனை
தேவமாதாவின் வணக்கமாத புத்தகம். (பக்கம் - 144).

❖அன்னைமரியாவின் நாளுக்குரிய சிந்தனையை வாசித்து தியானித்தல். (தேவமாதாவின் வணக்கமாத புத்தகம்).

❖பாடல்: அன்னைக்கு..

❖இறைவார்த்தை: லூக்கா 1:39-45.
இறைவார்த்தைப் பகிர்வு.

### குடும்பத்தை அன்னையிடம் ஒப்படைத்தல்.

அம்மா,இறைவனின் தாயே, உம்பாதத்தில் எம் குடும்பத்தை இன்று ஒப்படைக்கின்றோம். எங்கள் துன்பங்களில், கண்ணீரில், கவலைகளில், புரிந்துணர்வில், மகிழ்ச்சியில் எங்களோடு பயணித்து எங்களுக்கு நிறைவாழ்வை உமது மகனின் ஊடாக தந்து,அதன் மூலம் விசுவாசத்தில் தளர்ச்சியுறாது தூய உள்ளத்துடன் பயணிக்க எங்கள் குடும்பத்திற்கு அருள்தாரும்.
ஆமேன்.

குறிப்பு: மேல் உள்ள செபத்தை மெழுகுவர்த்தி ஏந்தி குடும்பமாக ஒப்புக்கொடுக்க வேண்டும்.
(குருவின் ஆசீர்வாதம்)

❖முடிவுப் பாடல்: அன்னைக்கு..